**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.41
https://ngmtamil.in/

# சங்க இலக்கிய வாழ்வியலோடு தொடர்புடைய வாணிப மேலாண்மை

**முனைவர் ச.அரியநாச்சியம்மாள்**
உதவிப்பேராசிரியர், பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)., கோபிசெட்டிபாளையம்.
ariyanacheyammal@gmail.com, Ph-9600367940

**முன்னுரை**

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து விவசாயம், பண்டமாற்று முறை, ஏற்றுமதி, இறக்குமதி முறைகள் ஆகியவை புழக்கத்தில் இருந்து வந்தன. பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதன் தனது அறிவினால் பொருட்களை விளைவிக்க செய்து அதை ஏற்றுமதி மற்றும் இறக்குமதியும் செய்துள்ளான். விவசாய நுண்ணறிவு சார்ந்து சிந்திக்கும் பொழுது ஆண் பெண் என்ற இணைப்பாலில் ஆண் வேட்டை சமூகம் சார்ந்து வேட்டையாடுபவனாகவும், பெண் வீட்டில் பயிர் தொழில் செய்ததாகவும் வரலாறுகள் உரைக்கின்றன. ஆண்களை விட பெண்கள் பயிர்கள் விளைவிப்பதில் முதன்மை பெற்றவராக திகழ்கிறார்கள். விவசாயம் சார்ந்த அணுகுமுறைகளை ஒப்பிடும்போது அவை ஆற்றங்கரை சமூகம் சார்ந்து அமைகிறது. தமிழர்களின் பண்டைய ஐந்திணைக் கோட்பாடு மக்களின் வாழ்வியலோடு ஒன்றியதாக அமைகிறது. மக்களின் வாழ்வியல் எனப்படும் போது அவற்றில் தொழிலும் முதன்மை சார்ந்த ஆதாரமாக அமைகிறது. தொழில்கள் என்று குறிப்பிடும்போது ஐந்திணை சார்ந்து திணைவாழ் மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், புலங்கு பொருட்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தொழில்கள் அமைகின்றன.

**பண்டமாற்று முறை**

தொழில்களை அடிப்படையாகக் கொண்டு மக்களின் பிரிப்பு முறையும் அமைகிறது. மக்கள் தொழில் சார்ந்த குறியீடுகளை சங்க இலக்கியத்தின் நெடுகிலும் காண முடிகிறது. தொழில்கள் என்று உரைக்கும் போது பல்வேறுபட்ட தொழில்கள் இருப்பதை காண முடிகிறது. அவற்றில் மூலாதாரமாக பண்டமாற்று முறையே அமைகிறது. பண்டைய தமிழர்களிடம் வாணிப முறைகளில் சிறந்ததாக பண்டமாற்று முறை கருதப்படுகிறது. பண்டமாற்று முறை என்பது, ஒரு பொருளுக்காக இன்னொரு பொருளை பரிமாற்றி கொள்ளும் முறையாகும். இது பழங்காலத்தில் பணம் பயன்படுத்தப்படாமல்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நடைபெற்ற செலாவணியாகும். உலகம் முழுவதும் பண்டமாற்று முறை புழக்கத்தில் இருந்துள்ளது. “சங்க காலத்திலே வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்ட மாற்று செய்து கொண்டார்கள். பண்டமாற்று என்பது ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொள்வது. அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினார்கள். பெரிய பட்டினங்களிலும் நகரங்களிலும்இ காசு கொடுத்துப் பொருளை வாங்கும் முறை இருந்தபோதிலும் அவர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது.”[1] பண்டமாற்றுமுறை என்பது ஒரு நிலத்தில் விளைந்த பொருட்களை மற்றொரு இடத்தில் விளைந்த பொருள்கொண்டு மாற்றியமைக்கும் முறையாகும். வாணிபம் கடல்வழி வாணிபம், தரைவழி வாணிபம் இரண்டு வகையாக அமைகின்றது. இதை பட்டினப்பாலை வரிகளில் அறியலாம்

“மீன் கொடுத்து நெல் குவைஇ” (பட்டினப்பாலை. வரி.206-207)

உப்பைக் கொடுத்து நெல்லைப் பெற்ற செய்தியைக் காணமுடிகின்றது. உப்புக்கு நிகராக நெல்லின் மதிப்பு இருந்ததையும் அறியமுடிகின்து. கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நிலமக்கள் உப்பு விளைத்தார்கள். உப்பு வாணிபம் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள் என்று நற்றிணைச் செய்யுள் கூறுகிறது.

“தந்நாட்டு விளைந்த வெண்ணல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி”(நற்றிணை.பா.183)

பாடல் வழி அறிய முடிகின்றது.

“நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்;” (குறுந்தொகை.பா.269)

நெய்தல் நிலத்து முதுமகள் ஒருத்தி தன் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி நெல் கொண்டுவரச் சென்றாள் என்று கல்லாடனார் கூறுகிறார்.

கல்லுண்டல் பண்டைய பழக்கங்களில் ஒன்று. ஆண்கள், பெண்கள் கல்லுண்ட செய்தியை இலக்கியங்களில் காணமுடிகின்றது. அகநானூறு பாடல் ஒன்றில் யானை தந்தத்திற்கு பதிலாக கல்லுண்ட செய்தியைக் காணமுடிகின்றது. கல்லுண்ணுதலுக்காக யானை தந்தம் கொடுத்து பண்டமாற்று முறையினை நோக்கும் போது சங்க இலக்கிய காலத்தில் நெல்லுக்கு இணையாக உப்பும், கல்லுக்கு இணையாக யானை தந்தம் கொடுத்த வரலாற்றினையும் அறிய முடிகின்றது.

“வரி மாண் நோன்ஞான் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்" (அகநானூறு.பா .61)

பண்டமாற்று முறை மிகச்சிறந்த வாணிப முறையாகும். பழங்காலத்தில் மதிப்பு என்பது விளைந்த இடம் பற்றியது அல்ல. விளைவித்த நபர்களைப் பற்றியதும் அல்ல. மாறாக விளைவித்த பொருட்களை பற்றியதாக அமைந்தது. இதன் வழி சங்க கால மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள முடியும். தரமான பொருள்களை விளைவிப்பவர்கள் சமூகத்தில் மதிப்புடையவர்களாக கருதப்பட்டனர். சங்க இலக்கிய காலகட்டத்தில் பண்டமாற்று முறை வாழ்வியலோடு ஒன்றியதாகவே கருதப்பட்டது.

**கடல்வழி வாணிபம்**

வாணிபம் நடைபெறும் போது சில சுவாரசியமான தகவல்களும் கடல் வழியாக வாணிபம் நடந்ததற்கு நிறைய சான்றாதாரங்களும் கிடைக்கின்றன. பர்மா தேக்கு பற்றி குறிப்பிடும் போது கடல் வழியாக தேக்கினை ஏற்றுமதி செய்துள்ளனர். எவ்வாறெனில் கடலின் நீரோட்டத்திற்கு தக்கவாறு தேக்கினை வெட்டி அவற்றை தமிழகம் உள்ளிட்ட பல நாடுகளுக்கு வாணிபம் மேற்கொண்டுள்ளனர். கருப்பு தங்கம் என்று அழைக்கப்படும் மிளகு மற்ற நாடுகள் மத்தியில் மிகச் சிறந்த வாணிப பொருளாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இவற்றை விளக்கும் வகையில் ஆங்கிலேயர்களின் வருகை கருப்பு தங்கம் எனப்படும் மிளகு சார்ந்து நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கடல் வழியாக பயணம் செய்த வாஸ்கோடாகாமா கடல்வழி பயணத்தை கண்டறிந்த போது அக்கடலின் வழியாக ஏற்றுமதி இறக்குமதி பொருட்களையே பெருமளவு கண்டடைந்துள்ளனர். கிழக்கிந்திய கம்பெனிகளின் வருகை வணிகம் சார்ந்து நிகழ்ந்தது என்பது நோக்கத்தக்கது. பட்டினப்பாலை போன்ற நூல்களில் பண்டமாற்று முறை, ஏற்றுமதி, இறக்குமதி, காவிரிப்பூம்பட்டினம், துறைமுகப்பட்டினம் போன்றவற்றினுடைய சிறப்புகளை பற்றி எடுத்துரைக்கும்போது இவற்றின் வழியாக ஏற்றுமதி இறக்குமதி நடந்துள்ளது என்பதை இலக்கியங்கள் வழி சுட்டிக்காட்ட முடியும்.

"முந்நீர் வழக்கம் மகடூஉ இல்லை"(தொல்காப்பியம்.பொருளதிகாரம், அகத்திணையியல் 34)

முந்நீர் என்று குறிப்படும் போது கடல் தாண்டி வாணிபம் செய்தனர் என்பதை அறியமுடிகின்றது. கடலில் போகிற மரக்கலங்கள் காற்றின் வேகத்தினால் திசை தப்பி ஓடுவதும் உண்டு. கப்பலோட்டும் பரதவர் அப்போது அவைகளை அடக்கிக் செலுத்தினார்கள்.

"முரசு கடிப்படைய அருந்துறை போகிப்
பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும்
பண்ணிய விலைஞர் போல" (பதிற்றுபத்து.பா.8ஆம் பத்து )

கடலில் செல்லும் கப்பல்கள் சில புயலில் அகப்பட்டு, சமயத்தில் நீரில் முழ்குவதும் உண்டு. கடலில் முழ்கும் கப்பல், இருள் சூழும் போது மலை மறைவது போலக் காணப்பட்டது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

“தரம் வேண்டும் பட்டினம் எய்திக் கரையோரம்

ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார் போல” (பரிபாடல்.பா.10)

நாவாய்க் கப்பல்கள் துறைமுகத்தை அடைந்த போது அதை மக்கள் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது. கப்பல்கள் பற்றிய குறிப்புகளின் மூலம் மக்கள் இறக்குமதிப் பொருள்களின் வரவினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சிறப்பு பெயரால் அமையும் வாணிபர்கள்**

மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய தொழில்களை சங்க இலக்கியத்தில் ஐந்திணைப் பாடல்கள் வழி காண முடிகிறது. சங்க இலக்கியப் பாடுபொருளில் முதற்பொருள் உரிப்பொருள் கருப்பொருள் என்ற மூன்று அடிப்படையில் சங்கத்தினை பாடல்கள் அமைந்துள்ளது. கருப்பொருளில் தொழில்கள் என்ற ஒரு பிரிவு முறை உள்ளது. தொழில்கள் என்று நோக்கும் போது அவர் நிலம் சார்ந்த தொழில்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. அம் முதன்மைப்படுத்தப்பட்ட தொழில்களில் சிறந்து விளங்கியவர்களுக்கு பட்டப்பெயர்களும் வழங்கப்பட்டுள்ளது என்பதை இலக்கியங்களில் காண முடிகிறது. எட்டி என்பது வணிகத்தில் சிறந்து விளங்குபவனுக்கு வழங்கப்படும் சிறப்பு பெயராக சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகின்றது.

“எட்டி சாயலன் இருந்தோன் தனது

பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையிலோர் (சிலம்பதிகாரம்.அடைக்கலக்காதை 163-164)

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சாயலன் என்னும் வாணிகன் எட்டிப்பட்டம் பெற்றிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. சிறப்பு பெயரினால் இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதை நோக்கும் போது வணிகம் சார்ந்த சிறப்பு நிகழ்வுகள் நடைபெறுவதை அறிந்து கொள்ள முடிகின்றது. வாணிபம் சார்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் நாட்டின் வளமையை எடுத்துக்காட்டும் வகையில் அமைகிறது. ஒரு நாட்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும் போது அந்நாடு வளர்ந்த நாடுகளில் ஒன்றாக அமைகிறது. இறக்குமதி பொருள்கள் குறைவதும் ஏற்றுமதி பொருள் அதிகமாவதும் நாடுகள் மிகச்சிறந்த பொருளாதார ஏற்றமுடையது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்**

சங்க இலக்கிய காலகட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களை பட்டியலிடும் போது மிளகு, அகில், சந்தனம் போன்ற வாசனை சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. மேலும் பருத்தி மற்ற பிறவகை தானியங்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஏற்றுமதி செய்யப்படும் போது அந்நாட்டின் வளமையும் சேர்த்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. துறைமுகப்பட்டினம் சார்ந்த குறிப்புகள் இலக்கியங்கள் நெடுகிலும் காண முடிகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் பண்டமாற்று சார்ந்த செய்திகளைக் காண முடிகிறது.

“பசுங்காய்ப் போழொடு கறிகலந்து

கஞ்சக நறுமுறி யளைஇ” (பெரும்பாணாற்றுப்படை. வரி.307)

நம் நாடு மட்டுமின்றி பிற நாடுகளிலும் மிளகு உணவுப் பொருட்களில் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருப்பதை அறியமுடிகின்றது. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் மிளகு மிக முக்கிய இடத்தை பெறுகின்றன. சங்க தமிழர் வாழ்வியலுக்கும் தற்கால தமிழர் வாழ்வியலுக்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. வாழ்ந்த இடத்திற்கும் சூழலுக்கும் தக்கவாறு அவர்களின் வாழ்வியலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றது. சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியல் கரூவூலம். இயற்கையோடு இயைந்த வாழ்வியலோடு வாழும் மக்கள் தங்கள் நிலப் பாகுபாடு, நீர் நிலைகள் பற்றிய குறிப்பு, திணை பாகுபாடு, முதல், கரு, உரிப்பொருள்கள் என்ற பிரிப்பு முறை அக்கால மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பும் வகையில் அமைகின்றது. திணைப் பிரிப்பு முறையினைப் பற்றி உரைக்கும் போது மலை சார்ந்த பகுதியிலிருந்து நீரானது காடுகளை கடந்து, சமவெளி நோக்கி வந்து மீண்டும் கடல் நோக்கிய பயணத்தினை திணை பாகுபாட்டில் அறியலாம். திணையை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் அமைகின்றன. தொழில் செய்யும் மனிதர்களை வாணிகத்தின் வழி பொருளாதார ஏற்ற தாழ்வுகளை அறிந்து கொள்ள முடியும். வாணிகம் மேற்கொண்ட செய்தியினை இலக்கியத்தின் நெடுங்கிலும் செலவு மேற்கொள்ளுதல், செலவு மறுத்தல் போன்றவற்றின் மூலமாகவும், பிரிவு என்ற பொருண்மையில் பொருள்வயற்பிரிவு என்ற பிரிப்பு முறையினை பொருளுக்கு மக்கள் கொடுத்துள்ள முக்கியத்துவத்தினை அறிய முடிகின்றது.

**காப்பியங்களில் வாணிகர்கள் மேலாண்மை**

காப்பியங்கள் நெடுங்கிலும் வாணிகர்களின் வாழ்வியல் கடல் சார்ந்து மக்கள் இணைந்து பயணம் மேற்கொண்ட செய்தியினை காப்பியங்கள் நெடுங்கிலும் காண முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் வாணிகம் தொடர்பான செய்திகளை காப்பிய நெடுங்கிலும் காணமுடிகின்றது. கோவலனின் மதுரை நோக்கிய பயணம் வாணிகம் மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கருதி நடைபெறுகின்றது. வணிக குலத்தை சார்ந்தவர்கள் காப்பியத் தலைவர்களாகவும் வணிகம் பற்றிய செய்திகளையும் காப்பிய முழுவதிலும் காணமுடிகின்றது,

“வடுவறிந்து ஈட்டிய கொள்வதும் மிகை கொளாது

கொடுப்பதுவும் குறைபடாது (பட்டினப்பாலை (அடி 206)

என்ற வரிகள் மூலம் அறியலாம். அதாவது வாங்குவோரிடம் கூடுதல் விலை வாங்காமலும், விற்போரிடம் குறைவாகக் கொடுக்காமலும் நேர்மையான லாபத்தை மட்டுமே ஈட்டும் கொள்கையைக் கொண்டிருந்தனர். வணிகத்தில் மிக உயரிய நோக்கமாக நேர்மையான விற்பனை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

முறையினை மேற்கொண்டனர். நேர்மையான வணிகம் மக்களின் வாழ்வியலில் உயர்ந்த குறிக்கோளாகக் கருதப்பட்டது.

நேர்மையின் முக்கியத்துவத்தினை திருக்குறளில் வள்ளுவர் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்" (திருக்குறள் 120)

இதன்படி பிறர் பொருளைத் தன் பொருளாக மதித்து, நேர்மையுடன் வாணிகம் செய்வதே தமிழரின் பண்பாடாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது. மணிமேகலை காப்பியத்தில் ஆதிரையின் கணவர் சால்வனின் பயணம் வாணிக நோக்குடையதேயாகும். கடல்வழி பயணம் பற்றிய செய்திகளை ஆதிரை பிச்சையிட்டகாதையில் நெடுகிலும் காணமுடிகின்றது. வளையாபதி காப்பியத்தில் வாணிகக் குடும்பத்தை நோக்கிய கதையாக அமைகின்றது. நவகோடி நாராயணன் வைரவணிகம் செய்ததாக குறிப்புகளை வளையாபதி காப்பியத்தில் காணமுடிகின்றது. காப்பியங்ககளில் வணிகம், வணிகர்களின் வாழ்வியலை தெளிவாக காணமுடிகின்றது.

**பட்டினப்பாலை குறிப்பிடும் வணிக மேலாண்மை**

சங்ககாலச் சோழ மாமன்னன் கரிகாற்பெருவளவனின் வணிகத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகமும் அதைச் சார்ந்த அங்காடிகளும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இரவும் பகலும் இயங்கியுள்ளது. பகலில் இயங்கிய கடைகளுக்கு ‘நாளங்காடி’ எனவும் இரவில் இயங்கிய கடைகளுக்கு ‘அல்லங்காடி’ எனவும் பெயரிடப்பட்டது. இன்றைய சுங்க நடைமுறையின் தொடக்கமாக அமைகின்றது.

“அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்அணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி” (பட்டினப்பாலை.வரி.132-134)

என்னும் பட்டினப்பாலை வரி மூலம் காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது சோழரின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது என்பது புலனாகிறது.

“நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நல்நெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூம் மிகைகொளா கொடுப்பதூம் குறைகொடாது
. . . . . . . . . . . . . மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்துஇனி துறையும்”(பட்டினப்பாலை.வரிகள்: 206-217)

சோழ வேந்தன் இரண்டாம் கரிகாலன் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது தான் பட்டினப்பாலை. இதன் காலம் கி.மு. 2ஆம் நூற்றாண்டு. “உழவர்களின் நீண்ட நுகத்தடியின் நடு போல நடுவுநிலைமை தவறாத மனம் உடையவர்களாகவும் பழி அஞ்சி பொய்பேசாது மெய்யேபேசி

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தம்மையும் பிறரையும் ஒன்றாக மதிப்பவர்களாகவும் இருப்பவர்கள் புகார் வணிகர்கள். தம்முடைய பொருட்களையும் பிறருடைய பொருட்களையும் ஒன்றாக மதிப்பவர் களாகவும் வாங்குகிறபோது அதிக அளவாக வாங்காமலும் கொடுக்கிறபோது குறைந்த அளவாகக் கொடுக்காமலும் பல பொருட்களையும் நியாயமான விலை கூறி விற்கின்றவர்கள் புகார் வணிகர்கள். பட்டினப்பாலை நூல் சோழநாட்டின் மிகப் பெரிய வணிக மையமாக காவிரிபூம்பட்டினம் திகழ்ந்ததை அறிய முடிகின்றது. நாளங்காடி, அல்லங்காடி பற்றிய செய்திகளை சிலப்பதிகாரத்திலும் காணமுடிகின்றது.

**பண்டையத் தமிழர்களின் நாணயப் பயன்பாடு**

சங்ககால மக்களின் வாழ்வியல் வணிக மேலாண்மையில் நேர்மையுடன் வணிகம் செய்ததற்கான பதிவுகளை இலக்கியங்கள் நெடுங்கிலும் காணமுடிகின்றது. இத்தகைய குறிப்புகள் தமிழர்களின் நேர்மையான வணிகமேலாண்மையினை பறைசாற்றுபவனாக அமைகின்றது. நாணயங்கள் பற்றிய குறிப்புகள், அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட ரோமபுரி, கிரேக்கம், சீனம் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். "பண்ட மாற்றத்தில் தோன்றிய சிக்கல்களே நாணய கண்டுபிடிப்பிற்கு காரணமாகிற்று என்பது பொதுவான கருத்து. சங்க காலத்தில் நடந்த உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்றிலேயே நடந்திருக்கிறது வெளிநாட்டு மாணிக்கம் தோன்றிய போது உள்நாட்டில் செய்தது போல் எளிதாக பண்டமாற்று முறைகளை மேற்கொள்ள இயலவில்லை எனவே முத்து மற்றும் நெல்லிக்காய் அளவிலான தங்க கட்டிகளை பரிமாறிக் கொண்டனர்."[2] பண்டமாற்றுமுறையில் தொடங்கி படிப்படியாக முத்திரை நாணயங்கள், உலோகங்களிலான நாணயங்கள் அவற்றில் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம் போன்ற குறிப்பிடத்தக்கவை. அரசர்களின் பெயர்கள், சின்னம் பொறித்த நாணயங்களை இன்றைய அகழாய்வுகளிலும் கண்டெடுக்கப்படுகின்றன.

**நாணயங்களின் பயன்பாடு**

பாண்டியர்கள், சோழர்கள், உரோமியர்கள் சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் புலக்கத்தில் இருந்துள்ளது. பண்டையக் காலத்தில் நாணயங்களுக்கு அவற்றின் அளவு மற்றும் எடையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. காசு பண்டையத் தமிழர்களின் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட அலகு ஆகும். மாடை என்பது ஒரு கழஞ்சு எடை கொண்ட உயர் மதிப்புடைய பொன் நாணயம் 'மாடை' என அழைக்கப்பட்டது. கழஞ்சு என்பது இது எடையைக் குறிப்பதோடு, தங்க நாணயங்களாகவும் புழக்கத்தில் இருந்தது. இவ்வாறு நாணயங்களின் பயன்பாட்டினை உற்று நோக்கும் போது தமிழர்களின் உயரிய வணிக மேலாண்மையினை தெளிவாக அறிந்து கொள்ளலாம். தமிழக நாணயங்களைக் கொண்டு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அறிய முடிகின்றது. மன்னர்கள் காலத்தில் செல்வ செழிப்புகளை கணிக்க தங்கம், வெள்ளி போன்ற நாணயங்களின் வருகையினைக் கொண்டு அறியலாம். பிறநாட்டு நாணயங்களின் பயன்பாடு நம் நாட்டு வணிகர்கள் பிற

நாடுகளுடன் கொண்ட வணிகச் சிறப்புகளை எடுத்துரைப்பவையாக அமைகின்றது. அகழாய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற நாணயங்கள் இத்தகைய கருத்தாக்கத்திற்கு வலுசேர்ப்பதாக அமைகின்றது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்கள் பற்றிய குறிப்புகளை காணும் போது பண்டையத் தமிழர்களின் வணிகம் கடல் கடந்தும் சென்றுள்ளதை அறிய முடிகின்றது.

**ஆனைமங்கலம் சோழர்கால செப்பேடுகள்**

"செப்பேடு என்பவை பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள், வம்சாவழி(பரம்பரை) போர்க்குறிப்பகள், மரபு வழிக்கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகத் தகடு ஆகும். இவை தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன.[3]" தழிழர்களின் கடல் கடந்த வணிகச் செயல்பாடுகளுக்கு வலுசேர்ப்பதாக இந்தியாவிற்கு தற்போது கொண்டுவரப்பெற்ற முதலாம் ராஜராஜ சோழன் மற்றும் அவரது மகன் ராஜேந்திர சோழன் ஆகியோரின் காலத்தைச் சேர்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க செப்பேடுகள் நெதர்லாந்தில் உள்ள லைடன் பல்கலைக்கழகத்தில் சுமார் 300 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்தது. இச்செப்பேடு 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆனைமங்கலம் சோழர் செப்பேடுகள் ஆகும். இச்செப்பேட்டில் நாகப்பட்டினத்தில் உள்ள புத்த விகாரத்திற்கு (சூடாமணி விகாரம்) ராஜராஜ சோழன் அளித்த கிராமக் கொடைகள் பற்றிய தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 21 பெரிய செப்பேடுகள் மற்றும் 3 சிறிய செப்பேடுகள் கொண்ட இந்தத் தொகுப்பு சுமார் 30 கிலோ எடை கொண்டதாகவும் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் செதுக்கப்பட்டுள்ளது. சோழ மன்னர்கள் கடல் கடந்து தங்கள் ஆட்சி சிறப்பினை பெற்றுள்ளனர் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

**முடிவுரை**

பண்டையத் தழிழர்களின் வாழ்வியல் வணிகத்துடன் மிக நெருங்கிய தொடர்ப கொண்டது. மன்னர்கள் கடல் கடந்து ஆட்சி செய்த சிறப்புகளை பல இலக்கியங்கள் மற்றும் செப்பேடுகள் வழி அறிய முடிகின்றது. நாணயங்களின் புழக்கம் வரலாற்று ரீதியான அணுகுமுறைகளை விளக்குவனவாக அமைகின்றது. செப்பேடுகளின் தகவல்கள் கடல் கடந்த தேசங்களின் உறவு முறையினை வெளிப்படுத்துவது வெள்ளிடைமடை. வணிகம் வாழ்வியலோடு கலந்தது அறத்தோடு தொடர்புடையது. தமிழர்கள் அறத்தோடு வாழ்ந்தனர். வணிகர் குலம் என்ற அமைப்பு முறையே பண்டையக் காலங்களில் இருந்ததை நோக்கும் போது வணிகர் குலம் அரசர்களுக்கு அடுத்த இடத்தைப் பெறுகின்றனர். காப்பியங்களில் காப்பியத்தலைவன், தலைவியாக வணிகர்கள் இருந்ததை நோக்கும் போது வணிகக்குலமும் வணிகமும் பண்டையக் காலத்தில் சிறந்துள்ளதை அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. பழங்காலத் தமிழர் வாணிகம் - ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி – பக். 2

2. நாணயவியல் - ஆசிரியர் நா சௌந்தரபாண்டியன் - பக். 2

3.https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AF%86%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%87%E0%AE%9F%E0%AF%81

**துணைநூற்பட்டியல்**

1. பழங்காலத் தமிழர் வாணிகம் - ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி - கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம் - சென்னை - 600005.

2. நாணயவியல் - ஆசிரியர் நா சௌந்தரபாண்டியன் - அரசு அருங்காட்சியகம் – சென்னை.